செப்டம்பர் 2–8

பாடம் 11

# கிறிஸ்துவில் கிடைக்கிற விடுதலை



கிறிஸ்துவில் நமக்குக் கிடைக்கிற 'சுயாதீனத்தை' நாம் பாதுகாக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை கலா 2:4இல் பவுல் சுருக்கமாகச் சொல்கிறார். 'சுயாதீனம்' என்று பவுல் அடிக்கடி பேசுகிறாரே, அதன் அர்த்தம் என்ன? சுயாதீனத்தில் என்னவெல்லாம் அடங்கும்? சுயாதீனம் எதுவரை? அதற்கு வரம்புகள் உண்டா? கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில், இரண்டு ஆபத்துகள் குறித்து கலாத்தியரை அவர் எச்சரிக்கிறார். முதலாவதாக, கிரியைத்துவம். கலாத்தியாவிலிருந்த பவுலின் எதிரிகள், தங்கள் நடத்தைகளின் மூலம் தேவதயவைச் சம்பாதிக்க முயன்றார்கள். அதனால், கிறிஸ்துவின் கிரியைகளே மனிதருக்கு விடுதலையை தருகின்றன என்பதையும், கிறிஸ்துமூலம் தாங்கள் பெற்றிருந்த இரட்சிப்பையும் காண மறந்தார்கள். இரண்டாவதாக, கிறிஸ்து நமக்கு வாங்கித் தந்திருக்கும் சுயாதீனத்தை சிற்றின்ப ஆர்வத்தால் அவமதித்தல். இப்படிப்பட்ட தன்மையுடையவர்கள், சுயாதீனமானது நியாயப்பிரமாணத்திற்கு முரணாக இருப்பதாகத் தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

கிரியைத்துவம், மாம்ச இச்சை இரண்டுமே சுயாதீனத்திற்கு எதிரானவை. இரண்டுமே மனிதரை அடிமைத்தனத்திற்குள் வைத்திருப்பவை. கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமான மெய்ச்சுயாதீனத்தில் நிலைத்திருக்கும்படி கலாத்தியரிடம் பவுல் வேண்டுகிறார்.

### மனன வசனம்

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள். கலா 5:13.

### ஆராய்ச்சிக்கு

கலா 5:1-15; 1 கொரி 6:20; ரோமர் 8:1; எபி 2:14,15; ரோமர் 8:4; ரோமர் 13:8.

செப்டம்பர் 9 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

2017, செப்டம்பர் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## சுயாதீனராக்கினார் கிறிஸ்து

*நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். கலா 5:1.*

வீரர்களை ஊக்கப்படுத்தி, ஒன்றுதிரட்டும் இராணுவ அதிகாரிபோல், கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தை விட்டுவிடக்கூடாதென்று கலாத்தியருக்குக் கட்டளையிடுகிறார் பவுல். அது தனியொரு கட்டளையாகத் தொனிக்கவேண்டும் என்பதுதான் பவுலின் நோக்கமும்கூட. அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களோடு சம்பந்தப்படுத்திதான் கலா 5:1 சொல்லப்படுகிறது. ஆனால், கிரேக்க மொழியில் தனியொரு வசனம்போல் அதன் வாக்கிய அமைப்பு அமைந்துள்ளது. ஒரு ராட்சத விளம்பரப் பலகையைப்போல் அது தெரியவேண்டுமென்றுதான் பவுல் விரும்பினார். கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தை வலியுறுத்தி பவுல் பேசினார்; கலாத்தியர் அதனை இழந்துபோகும் ஆபத்தில் இருந்தார்கள்.

**கலா 1:3,4; 2:16; 3:13 இல் உள்ள சில உருவகங்கள் யாவை? கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றை விளங்கிக்கொள்ள இவை எவ்வாறு உதவுகின்றன?**

---

'கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீனம்' என்பதையும் ஓர் உருவகமாகவே பவுல் சொல்கிறார். கலா 5:1. முற்காலத்தில் அடிமைகளை விடுவிக்க ஒரு முறைமை பின்பற்றப்பட்டது. அடிமைகளுக்கு உரிமை எதுவும் கிடையாது. எனவே, தெய்வம் ஒன்று அவர்களுக்கு விடுதலையை வாங்கிக்கொடுத்தால், அவர்கள் விடுதலையாகி, அந்தத் தெய்வத்திற்குச் சொந்தமாகலாம் என்று கருதப்பட்டது. ஆனால் உண்மையில் இது ஒரு கற்பனைதான். உதாரணமாக, கி.மு 201 முதல் கி.பி 100 முதல் பிதியன் அப்பொலோ எனும் தெய்வத்துக்கு எழுதப்பட்ட கிட்டத்தட்ட 1000 சாசனங்கள் டெல்பியில் உள்ள ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு சொல்கிறது: "அம்பிசா ஊர் சொஸிபஸிடமிருந்து நிசேயா எனும் பெண் அடிமையை, பிதியனாகிய அப்பொல்லோ வாங்கியிருக்கிறார். அதற்கான கிரையத்தை நிசேயா செலுத்திவிட்டாள்." - பென் விதரிங்டன் III. ஒரு அடிமையை விடுதலைசெய்ய, அந்தத் தெய்வம் கிரையம் கொடுத்ததில்லை. அந்த அடிமைதான் ஆலயக்கருவூலத்தில் கிரையம் செலுத்தவேண்டும்.

பவுல் சொல்வதற்கும் இந்த முறைமைக்கும் ஒற்றுமை இருந்தாலும், அடிப்படையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பவுல் சொல்லும் சுயாதீனத்தில் நமக்கான விலைக்கிரயத்தை நாம் செலுத்தமுடியாது. 1கொரி 6:20; 7:23. நாம் செலுத்த முடியாத அளவிற்கு அது அதிகமானது. நம்மையே நாம் இரட்சிக்கத் திராணியற்றவர்கள்; நாம் செய்யமுடியாததைச் செய்துமுடிக்க இயேசு முன்வந்தார். அதற்கு நம் ஜீவனை அவர் அபராதமாகக் கேட்கவில்லை. ஆக்கினையிலிருந்து நம்மை விடுவிக்க, நம் பாவங்களுக்கான அபராதத்தை அவரே செலுத்தினார்.

---

உங்களை நீங்களே இரட்சிக்க முடியுமென நீங்கள் எப்போதாவது எண்ணியதுண்டா? இயேசுவுக்குள் அவர் நமக்குத் தந்திருக்கிறவற்றிற்காக நாம் எவ்வளவு தூரம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்?

# கிறிஸ்தவ சுயாதீனத்தின் தன்மை

'சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருங்கள்' என்றுமட்டும் பவுல் சொல்லவில்லை. அதை 'கிறிஸ்து நமக்கு உண்டாக்கினார்' என்றும் கூறுகிறார். கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாதீனத்தில் ஏன் உறுதியாக நிற்கவேண்டும்? ஏனெனில், கிறிஸ்து ஏற்கனவே அவர்களைச் சுயாதீனர்களாக்கிவிட்டார். அதாவது, கிறிஸ்து ஏற்கனவே நமக்காகச் செய்ததை வைத்துதான் நமக்குச் சுயாதீனம் கிடைத்திருக்கிறது.

தகவலைச் சொல்லிவிட்டு, பிறகு புத்திசொல்வதை பவுலின் நிருபங்களில் அடிக்கடி நாம் காணலாம். 1 கொரி 6:20; 10:13,14; கொலோ 2:6,7. உதாரணமாக, கிறிஸ்துவுக்குள் நம்முடைய நிலைமைகுறித்த தகவல்களை ரோமர் 6 இல் பல இடங்களில் பவுல் சுட்டிக்காட்டுகிறார். ' நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்' எனும் உண்மையைச் சொல்கிறார். ரோமர் 6:6. பிறகு அந்த உண்மையை அடிப்படையாக வைத்து, 'நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக' என்று எச்சரிக்கிறார். ரோமர் 6:12. நற்செய்தியின்படி ஒழுக்கமாக வாழ்வதென்பது, நாம் கடினமாக முயன்று, நாம் தேவபிள்ளைகளென்பதை நிரூபிப்பது அல்ல. மாறாக, நாம் ஏற்கனவே தேவபிள்ளைகளாக இருப்பதால், நற்கிரியைகளைச் செய்வதாகும்.

***எதிலிருந்து தேவன் நம்மை விடுதலையாக்கி இருக்கிறார்? ரோமர் 6:14,18; 8:1; கலா 4:3,8; 5:1; எபி 2:14,15.***

கிறிஸ்தவ வாழ்வு சுயாதீனமான வாழ்வு என்பதை பவுலின் நிருபங்களில்தான் புதிய ஏற்பாட்டில் அதிகம் காணமுடியும். விடுதலை, சுயாதீனம் போன்ற வார்த்தைகள் பவுலின் நிருபங்களில் 28 முறை காணப்படுகின்றன; மற்றப் புத்தகங்களில் 13 முறைதான் காணப்படுகின்றன.

சுயாதீனம், விடுதலை என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார்? அரசியல் உரிமையை, பொருளாதார உரிமையை நாம் விரும்புகிறபடி வாழ்வதற்கான உரிமையை அது சுட்டிக்காட்டவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள உறவை அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஒரு விடுதலை அது. நியாயப்பிரமாணத்தினால் வரும் ஆக்கினையிலும் அடிமைத்தனத்திலுமிருந்து கிறிஸ்தவர்கள் பெறக்கூடிய விடுதலை. பாவம், நித்திய மரணம், பிசாசு போன்றவற்றிலிருந்து கிடைக்கும் விடுதலையும் அதில் அடங்கும்.

இயேசு கிறிஸ்து இல்லாத மனித வாழ்க்கை ஓர் அடிமைத்தன வாழ்க்கைதான். நியாயப்பிரமாணம், உலகை ஆளும் தீய சக்திகள், பாவம், மாம்சம், பிசாசு போன்றவற்றிற்கு அடிமைப்படுகிறோம். அடிமைத்தன ஆவிகளின் அதிகாரத்தை உடைக்கவே, தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பினார்.'' - டிமோதை ஜார்ஜ்.

வாழ்க்கையில் எவற்றிற்கெல்லாம் அடிமைப்பட்டுக் கிடக்கிறீர்கள்? கலா 5:1 ஐ மனனம் செய்யுங்கள்; கிறிஸ்துவுக்குள் உங்களுக்குள்ள சுயாதீனத்தை தேவன் உங்கள் வாழ்வில் நிஜமாக்கும்படி அவரிடம் கேளுங்கள்.

## கிரியைத்துவத்தின் பேராபத்து (கலா 5:2–12)

கலா 5:2 இல் 'இதோ' என்று பவுல் சொல்வதை, 'கவனியுங்கள்', 'கேளுங்கள்', 'என் வார்த்தைகளைக் குறித்துக்கொள்ளுங்கள்' என்றும் மொழி பெயர்த்திருக்கலாம். 'பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றும் அங்கு அவர் சொல்லுகிறார். எனவே, அதைத் தொடர்ந்து தான் சொல்லப்போவது (கலா 5:2-12) அவ்வளவு முக்கியமானதென்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். இரட்சிப்பைப் பெற, புறஜாதியார் விருத்தசேதனம்பண்ண வேண்டுமென்பதில் உள்ள ஆபத்தான விளைவுகளைக் கலாத்தியர் அறிந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார்.

***விருத்தசேதனத்தைப் பொறுத்தவரை கலா 5:2-12 இல் பவுல் கொடுக்கும் எச்சரிப்பு என்ன?***

விருத்தசேதனம்பண்ணி, தேவ தயவைப் பெற விரும்புவதின் முதல் ஆபத்து என்னவென்றால், நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ளவேண்டிய கடமை ஏற்படுவதுதான். 2,3 ஆம் வசனங்களில் பவுலின் சொல்வண்ணங்கள் கவனிக்கத்தக்கவை. 'கிறிஸ்துவினால் அவர்களுக்குப் பிரயோஜனமிராது. மாறாக, அவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கடமைப்படுகிறார்கள்' என்கிறார். நியாயப்பிரமாணத்தின்படி ஒருவன் வாழ விரும்பினால், இன்னின்ன கட்டளைகளைத்தான் கைக்கொள்வேனென்று அவன் தேர்ந்தெடுக்கமுடியாது; எல்லாவற்றையும் கைக்கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் கைக்கொள்ளாவிட்டால், ஒன்றையும் கைக்கொள்ளாதவனாக எண்ணப்படுவான்.

இரண்டாவது, கிறிஸ்துவிடமிருந்து அவர்கள் 'தறிப்புண்டு' போவார்கள். கிரியைகளினால் நீதிமானாகத் தீர்மானிப்பதுஎன்பது,தேவன் ஏற்படுத்தியிருக்கும் வழியைப் புறக்கணிப்பதாகும். ''இரண்டு விதங்களிலும் நீதிமானாக்கப்படுவது முடியாத காரியம். 'கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதால், உங்களை நீங்களே இரட்சிக்க முடியாதென ஒத்துக்கொள்கிறீர்கள்; விருத்தசேதனம்பண்ணிக்கொள்வதால், உங்களை நீங்களே இரட்சிக்க முடியுமென்கிறீர்கள். இரண்டையும் செய்வது நடக்காத ஒன்றாகும்'. - ஜான் ஆர்.டிபுள்யூ. ஸ்டாட்.

மூன்றாவது, ஆவிக்குரிய வளர்ச்சியை அது தடைசெய்கிறது. வச 7 இல் 'தடைசெய்தல்' என்பதற்கான கிரேக்க வார்த்தை இராணுவ வட்டார வார்த்தையாகும். அது, 'எதிரி முன்னேறாதபடி தடுப்பதற்குச் சாலையை உடைத்துப் போடுவதை, பாலத்தைத் தகர்ப்பதை, வழியில் தடைகளை வைப்பதைச்' சுட்டிக்காட்டும். - 6*SDABC, p 978.*

கடைசியாக, சிலுவை நம்மைக் குற்றவாளிகளாகக் காட்டுவதை விருத்தசேதனம் ஏற்க மறுக்கிறது. எப்படி? உங்களை நீங்களே இரட்சிக்க முடியுமென்பதைத்தான் விருத்தசேதனம் காட்டுகிறது; அது மனிதனின் பெருமைபாராட்டுதலுக்கு ஏதுவாகிறது. ஆனால், சிலுவைபற்றின செய்தியோ மனிதனின் பெருமை பாராட்டலுக்கு எதிரானது. ஏனெனில், சிலுவையை ஏற்றுக்கொண்டால், நாம் முற்றிலும் கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதை ஒத்துக்கொள்ளவேண்டுமே.

'விருத்தசேதனத்தில் பிடிவாதமாக இருந்த அந்த ஜனங்கள் சந்ததியின்றி அழிந்துபோனால் நலமாயிருக்கும்' என்கிறார். கடினமான வார்த்தைகள். அப்படியானால், இந்தக் கருத்தை அவர் எவ்வளவுக்கு எதிர்த்திருக்கிறார்?

## மாம்ச இச்சை அல்ல, சுயாதீனம் (கலா 5:13)



கலாத்தியரில் முக்கியத் திருப்புமுனையான வசனம் கலா 5:13. இதுவரை, இறையியல் உண்மைகளைமாத்திரமே வலியுறுத்தி வந்தவர், இப்போது கிறிஸ்தவ நடத்தைபற்றிப் பேசுகிறார். நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வான்?

**சுயாதீனத்தை என்ன விதத்தில் தவறாகப் பயன்படுத்திவிடக் கூடாதென்று கலாத்தியரை பவுல் எச்சரிக்கிறார்? கலா 5:13.**

‘கிறிஸ்துவுக்குள் சுயாதீனமும் கிருபையும் விசுவாசிகளுக்கு உண்டு’என்று தான் வலியுறுத்துவதால், தவறான கருத்துகளுக்கு அது வழிநடத்தக்கூடுமென பவுல் அறிந்திருந்தார். ரோமர் 3:8; 6:1,2. பிரச்சனை பவுலின் நற்செய்தியில் இல்லை; மனிதனின் சுயநல இயல்பில்தான் உள்ளது. தன்னடக்கமின்றி மக்கள் நடந்துகொண்டதால்தான், தேசங்களும் பட்டணங்களும் ஒழுக்கச்சீர்கேடு அடைந்ததை வரலாறுமுழுவதிலும் காணலாம். இப்படிப்பட்ட ஒரு தூண்டுதலை, தன் சொந்த வாழ்வில் உணராதவர் யாரேனும் உண்டோ? எனவேதான், இயேசுவின் பின்னடியார்கள் மாம்சத்திற்கேற்றபடி நடக்கக்கூடாதென்கிறார் பவுல். மேலும், இதற்கு நேர்மாறாக, ‘அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்படி’ கூறுகிறார். சுயத்திற்கும் மாம்சத்திற்கும் மரித்தால்மாத்திரமே இது சாத்தியம். தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற விரும்புகிறவர்கள், பிறருக்கு உதவக்கூடியவர்கள் அல்லர்.

கிறிஸ்துவுக்குள் நாம் சுயாதீனர்கள் என்பது, இவ்வுலகின் அடிமைத்தனத்திலிருந்து நமக்கு விடுதலை கிடைத்ததைமட்டும் சுட்டிக்காட்டவில்லை; மாறாக, அன்பினால் பிறருக்கு சேவைசெய்ய வேண்டிய கடமையுணர்வு பிறந்ததையும் சுட்டிக்காட்டுகிறது. ‘அன்பினால் தங்குதடையின்றி பிறருக்கு உதவவும், பதவிக்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்படாமல் சுயநலமற்ற அன்பினால் சேவைசெய்கிற மனித சமுதாயத்தை உருவாக்கவும் கிடைக்கிற வாய்ப்பு அது.’ – சாம் கே. வில்லியம்ஸ்.

பிறருக்கு அப்படிப்பட்ட ஊழியஞ்செய்யவேண்டுமானால், அது சாதாரண மனித அன்பால் கூடாதென்பதை கலா 5:13 கூறுகிறது. கிரேக்கமொழியில் அவ்வசனம் அவ்வாறு அமைந்துள்ளது. மேலும், கலா 5:13 இல் அன்புக்குமுன் சுட்டிடைச் சொல்லைப் பயன்படுத்தி, அது தனித்தன்மையான ஓர் அன்பெனக் காட்டுகிறார் பவுல். அதாவது, ஆவியானவர்மூலம்மாத்திரமே நாம் பெற்றுக் கொள்ளும் தெய்வீக அன்பு அது. ரோமர் 5:5. இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், ‘அடிமையாகுதல்’ என்பதற்கான கிரேக்க வார்த்தைதான் அங்கு, ‘ஊழியஞ்செய்தல்’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, நம்முடைய சுயநலனுக்காக நமக்கு விடுதலை அருளப்படவில்லை; மாறாக, தேவ அன்பை அடிப்படையாகக் கொண்டு, ஒருவருக்கு ஒருவர் நாம் அடிமைகளாவதற்கே நமக்கு விடுதலை அருளப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்குள் உங்களுக்குக் கிடைத்துள்ள சுதந்தரத்தை வைத்து, அவ்வப்போது பாவஞ் செய்ய நீங்கள் துணிந்ததுண்டா? அந்த எண்ணம் ஏன் மோசமானது?

## நியாயப்பிரமாணம் முழுவதையும் (கலா 5:13–15)

***'நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றுதல்' தேவையில்லை என்பதுபோல் கலா 5:3 இல் பேசும் பவுல், 'நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றுதல்' தேவையென்று கலா 5:14 இல் பேசுகிறார். இதன் அர்த்தம் என்ன? ரோமர் 10:5; கலா 3:10,12; கலா 5:3 வசனங்களை ரோமர் 8:4; 13:8; கலா 5:14 உடன் ஒப்பிடுங்கள்.***

'நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றுதல்'பற்றிக் கலா 5:14 சொல்வதும், கலா 5:3 சொல்வதும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகப் பலர் நினைக்கிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. நியாயப்பிரமாணத்தின்படி அமையும் இருவகை கிறிஸ்தவ நடத்தைகளை வேறுபடுத்திக் காட்டுகிறார் பவுல். கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது அவசியமென்று அவர் சொல்லும்போது,'நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளி' களாக இருப்பதாகச் சொல்லவில்லை. நியாயப்பிரமாணத்தின்படி நடப்பதன்மூலம், தேவ அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முயற்சிப்பவர்களைப்பற்றிக் கூறும்போதுதான் அவர் அப்படிச் சொல்கிறார்.

அதனால், கிறிஸ்துவில் இரட்சிப்பைப் பெற்றவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியமாட்டார்களென்று அர்த்தமில்லை. உண்மையான கிறிஸ்தவர் நியாயப்பிரமாணத்தை எழுத்தின்பிரகாரமாகக் கடைப்பிடிப்பதோடு, அதன் நோக்கத்தையும் 'நிறைவேற்றுவார்'. இப்படிப்பட்டோரின் கீழ்ப்படிதல் இயேசுவில் வேர்கொண்டிருக்கும். மத் 5:17. இவர்கள் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிக்கமாட்டார்கள்; 'பிறரில் அன்புகூருவதுதான் நியாயப்பிரமாணம்' என்று சொல்லி, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்காமலும் இருக்கமாட்டார்கள்; நியாயப்பிரமாணம்முழுவதையும் அதன் மெய்அர்த்தத்தோடும் நோக்கத்தோடும் கைக்கொள்கிறவர்களாக இருப்பார்கள்.

***நியாயப்பிரமாணத்தின் முழு அர்த்தத்தையும் எங்கே காணலாமென்று பவுல் கூறுகிறார்? லேவி 19:18; மாற்கு 12:31,33; மத் 19:19; ரோமர் 13:9; யாக் 2:8.***

லேவியராகமத்தில் காணப்படும் ஒரு நியதி இது. ஆனால், லேவி 19:18 லிருந்து இயேசு சுட்டிக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்டு கலாத்தியரில் பவுல் பேசுகிறார். 'நியாயப்பிரமாணத்தின் சுருக்கம் அன்பு' என்று லேவி 19:18 ஐச் சுட்டிக்காட்டினவர், இயேசு மாத்திரம்தான்' என்று சொல்லமுடியாது. இயேசுவுக்கு முன்பு வாழ்ந்த ரபி ஹல்லெல் என்பவர், ''உனக்குப் பிடிக்காததை உன் அயலானுக்குச் செய்யாதிருப்பாயாக; நியாயப்பிரமாணத்தின்சுருக்கம் அதுதான்'' என்று சொல்கிறார். ஆனால், இயேசுவோ வேறொரு கோணத்தில் இதைக் கூறுகிறார். மத் 7:12. நியாயப்பிரமாணமும் அன்பும் ஒன்றுக்கொன்று முரணானதல்லவென்று இவ்வசனம் காட்டுகிறது. அன்பில்லாத நியாயப்பிரமாணம் வெறுமையானது; நியாயப்பிரமாணமில்லாத அன்பு நோக்கமற்றது.

பிறரிடம் அன்புகாட்டுவது எளிதா? பத்துக் கற்பனைகளின் வார்த்தைபடி நடப்பது எளிதா? ஏன்?

"மெய்யான விசுவாசம் அன்பினால் கிரியைசெய்யும். கல்வாரியை நீங்கள் நோக்கிப் பாருங்கள் . அது உங்கள் ஆத்துமாவை வெறுமனே இருக்கவிடாது; உங்களைத் தூங் கவும்விடாது. இயேசுவின் விசுவாசத்தை உருவாக்கும்; அது கிரியை செய்யும் விசுவாச மாக இருக்கும்; சுயநலமெனும் சேறு நீங்கும்படி, அது ஆத்துமாவைச் சுத்திகரிக்கும். கிறிஸ்துவை விசுவாசத்தால் பற்றிக்கொள்ளும்போதுதான், நம் கிரியை துவங்குகிறது. மோசமான பாவநடத்தைகள் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளன. தீவிரமாகப் போராடித் தான் அவற்றை மேற்கொள்ளவேண்டும். ஒவ்வோர் ஆத்துமாவும் விசுவாசப் போராட் டைத்தைப் போராடவேண்டியது அவசியம். ஒருவன் கிறிஸ்துவின் சீடனாக இருந்தால், உலக மதிப்பை நாடமாட்டான்; கடின நெஞ்சனாகவும், இரக்கமற்றவனாகவும் இருக்க மாட்டான்.

"விசுவாசம் கிரியைசெய்யும்போது, அன்பு செயல்படத் துவங்கும். சோராமல் செயல் படுவதுதான் வேதாகமம் கூறுகிற மதம். 'அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தய வுள்ள சித் தத்தின்படி விருப்பத்தையும்செய்கையையும்உங்களில்உண்டாக்குகிறவராயிருக்கிறார்.' 'நற்கிரியைகளைச் செய்ய நாம்பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும்; நற்கிரியைகளைச் செய்ய கவனமுள்ளவர்களா யும் இருங்கள்.' மத் 5:16ஐயும் பிலி 2:12 ஐயும் வாசியுங்கள். 'உங்கள் கிரியைகளை அறிந்திருக்கிறேன்' என்று மெய்யான சாட்சி சொல்கிறார்.

"மும்முரமாக முயன்றாலும் அது இரட்சிப்பைப் பெற்றுத்தராது என்பது உண்மை தான். ஆனால், கிறிஸ்துவோடு நம்மை இணைக்கும் விசுவாசமானது நம் ஆத்துமாவை மும்முரமாகச் செயல்படத்தூண்டும் என்பதும் உண்மையே".

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *வியாழக்கிழமை பாடத்தின் கடைசிக் கேள்விக்கான பதிலை கலந்தாலோசி யுங்கள். இரண்டில் எதைச் செய்வது எளிது? ஏன்? நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதுபற்றி உங்கள் பதில்கூறும் முக்கிய உண்மைகள் யாவை?*
2. *விசுவாசமானது அன்பினால் "கிரியைசெய்கிறது." இதன் அர்த்தம் என்ன?*
3. *'கிறிஸ்துவுக்குள் கிடைத்திருக்கும் விடுதலையை வைத்து, பாவத்தில் ஈடுபட முயல்கிறீர்களா? அது ஏன் எளிது? அது எப்படிப்பட்ட கண்ணி யில் சிக்கவைக்கிறது? 1யோவான் 3:8.*

**பாடச்சுருக்கம்:** *கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றால்தான் உலக அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். மேலும், நல்லதொரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அழைக்கப்படு கிறோம். இந்த இரண்டுமே நற்செய்தியின் விடுதலையில் அடங்கும். இந்தச் சுதந்தரம், கிரியைத்துவத்திற்கோ மாம்ச சிந்தைக்கோ நம்மை வழிநடத்தாது. அதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். பிறருக்குச் சேவைசெய்யவே நமக்கு விடுதலை தந்திருக்கிறார்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.